இராவணனுடைய ஆசாரியர்கள்

பிடித்த பிடி விடாமையில் மூர்க்கனும் முதலையும் ஒரு வகுப்பு என்கிறார்கள். மூர்க்கனுக்கு உலகமெல்லாங்கூடி உபதேசஞ் செய்தாலும், சிறிதும் பயன்படுவதில்லை. இராவணனுக்கு எத்தனை பேர்கள் இதமுரைத்தனர்? எவ்வெவ்விதமாக உபதேசங்கள் தந்தனர்? அதன் பலன் என்னாயிற்று என்பது உலகுக்குத் தெரிந்திருந்தாலும் விசதமாக ஈண்டு நிரூபிக்கப்படுகிறது. ரஸிகர் களிக்க.

1. இராமபிரான் கரதூஷணாதி வதம் செய்து முடித்தவுடனே அகம்பனன் ஜனஸ்தானத்தினின்றும் இலங்கைக்குச் சென்று இராவணனுக்குச் செய்தி கூற, அவன் துயரமும் கோபமுமுற்றுத் தன் தேரின் மேலேறித் தண்டகாரணியத்தில் வசிக்கும் தாடகா புத்திரனை மாரீசனிருப்பிடம் வந்தான். மாரீசனால் முறைப்படி மரியாதை செய்யப்பெற்றவவன் அகம்பனனிடத்தில் தான் கேள்விப்பட்ட செய்திகளைக் கூறி, இராமனுக்குத் தீங்கு விளைவிக்கத் தான் வந்திருப்பதாகச் சொல்லி, அதற்கு நீ துணைபுரிய வேண்டுமென்றான். உடனே மாரீசன் அவனுக்கு இதமுரைக்கத் தொடங்கினன். "அப்பா ராவணா! உனக்கு இந்த துர்ப்புத்தியை யுண்டாக்கினவன் யாவன்? உனக்கு நண்பன் போலவிருந்து உண்மையிற் பகைவனாகி உன்னைக் குடும்பத்தோடுங் கெடுக்க நினைத்து உனக்கு இந்த துர்ப் புத்தியை விளைத்தவன் யாவன்? உன்னுடைய மேன்மைகளைப் பொறுக்கமுடியாமல் உன்னையும் அரக்கர் குலத்தையும் அடியோடு பாழாக்கவெண்ணியே இப்படிப்பட்ட விபரீத புத்தியை எவனோ உனக்கு உண்டாக்கிவிட்டான். அவனைப் பரம சத்துருவென்று நீ நினைக்க வேண்டுமே. ராவணா! இராமனுடைய பெருமையை நீ அறியாய். ராக்ஷஸ வேட்டையாடுவதில் நிகரற்ற பராக்ரமசாலியான ராமனாகிற சிங்கத்தை நீ வலுவில் சென்று சண்டைக் கிழுத்தாயாகில் நீயும், ராக்ஷச குலமும் பூண்டற்றுப்போய் யமன் வாயில் விழவேநேரும். லங்கேச்வரா! நீ மனத் தெளிவுபெற்று லங்கைக்குத் திரும்பிச்சென்று மறுபடியும் இத்தகைய துர்ப்புத்தி சிறிதும் உண்டாகப்பெறாமல் இனிது வாழ்வாயாக!" என்று கல்லும் கரையும்படி இதமான சொற்களைச் சொல்லிப் போக விட்டனன்.

2. இங்ஙனே இதமுரைக்கப்பெற்ற இராவணன் இலங்கைக்கு மீண்டு சென்றபின் அங்குவந்து சேர்ந்த சூர்ப்பணகையின் சொற்களால் மனந் திரியப்பெற்று, மறுபடியும் மாரீசனிடமே ஓடிவந்து பழையபடியே தன்னெண்ணத்தைக் கூறி இதற்கு நீ துணைபுரிந்தே யாகவேணும் என்று மிகவும் நிர்ப்பந்தித்தான். அப்போது மீண்டும் மாரீசன் மிக விரிவாக ஹிதோபதேசஞ் செய்தனன். "அரக்கர் தலைவனே! நீ சாரர்களையனுப்பிச் சத்துருக்களின் பலாபலங்களைத் தெரிந்துகொள்ளவில்லை; இராமன் சௌர்யவீர்ய பராக்ரமநிதி யென்பதையும், தேவாதி தேவனென்பதையும் நீ தெரிந்துகொள்ளவில்லை. ஐயோ! உனக்கேன் இப்படி விபரீத புத்தியுண்டாயிற்று? நீ நினைக்கிறபடி இராமனிடத்தில் ஹேயகுணம் சிறிதுமில்லையே; அவன் ஸமஸ்தகல்யாண குணக்கடல் காண். அரக்கர் குலத்தை வேரோடு பிடுங்கியழிக்கும் வல்லமை வாய்ந்த இராமனிடம் அபசாரபுத்தி கொள்ளாதே. இராமனது பராக்கிரமமும், தேஜஸ்ஸும் அளவிட முடியாதவை. எரிகிற நெருப்பை அணுக நினைப்பதுமுண்டோ? உனக்கு உயிரின்மேல் பற்றிருக்குமாகில், இன்பமாக இன்னமும் வாழவேணுமென்றிருப்பாயாகில் இராமனுக்குக் கெடுதிசெய்ய நெஞ்சிலும் நினையாதே. எதிர்த் தலையிலுள்ள சக்தி விசேஷங்களை உள்ளபடி தெரிந்துகொள்ள உனக்கு சக்தியில்லையே. அவ்விராமனிடம் நான் பட்ட பாடுகளை நெஞ்சால் நினைக்கும்போதும் உடல் நடுங்குகின்றதப்பா! இராமனுக்கு

எள்ளளவும் தீங்குசெய்ய நினைத்தல் தகாது. என் பேச்சை மீறி நடந்தாயாகில் உனக்குக் கேடு விளைந்தேதீரும். ராவணா! எங்குப் பார்த்தாலும் எனக்கு ராம மயமாகவே காண்கிறது. பலவாயிரம் ராமமூர்த்திகளைக் காண்பதுபோலுள்ளதப்பா. அவ்விராமனது அம்புகளினின்று நான் எப்படியோ தப்பிப் பிழைத்து இனி ஒருகாலும் அப் பெருமானிடத்து அபசாரப் படலாகாதென்று உறுதிகொண்டு தவக்கோலம் பூண்டு காலங்கழித்து வருகிறேனப்பா. நான் எப்பொழுதும் ராமனை நினைத்தே திகில்பட்டுக்கொண்டிருப்பதால் "ர" என்னுமெழுத்தை முதலிற்கொண்ட ரத்னம், ரதம் முதலான பேர்களுங்கூட எனக்குப் பயத்தை விளைவிக்கின்றனகாண். அவ்விராமனது பிரபாவம் என்னொருவனுக்கே தெரியும். நீ உயிரோடிருக்க விரும்புவாயாயின் இராமனது பிரஸ்தாவத்தையுங்கூட என்னிடம் செய்ய வேண்டா. எங்கும் ப்ரியமான வார்த்தைகளைச் சொல்லுவார் பலர் கிடைப்பர்கள்; அப்ரியமாயும் ஹிதமாயுமுள்ள பேச்சைச் சொல்லுவாருமிலர், கேட்பாருமிலர். நான் சொல்லும் ஹிதம் உன் நெஞ்சிற் படவில்லையே. ராவணா! நீ ராமனுடன் விரோதப்படுவாயாயின் நிச்சயமாக உன் பந்துமித்திரர்களுடன் மாண்டுபோவாய். ஐயோ! ராக்ஷச வீரர்கள் ராமபாணங்களால் அடியுண்டு தரையில் வீழ்வதை நீ காணப்போகின்றனை; லங்காபுரம் முழுதும் ராம பாணங்களால் சூழப்பட்டு அக்கினிச் சுவாலைகள் நாற்புறமும் நிரம்பப்பெற்று வீடுகளெல்லாம் நீறாகப்போவதை நீ காணப்போகின்றனை. [இத்யாதிகள் மாரீசோபதேசங்கள்.]

3. மாரீசனுடைய உபதேசத்திற் கடுத்தபடி பிராட்டியின் உபதேசம் இராவணனுக்குக் கிடைத்திருக்கிறது. இதுவும் பல தடவைகளில் கிடைத்தது. சிலவுபதேசங்கள் கேண்மின்; ராவணா! ராமன் ஆகாசத்திலுள்ள சந்திரனைக் கீழே விழத்தள்ளவும், கடல் முழுவதையும் வற்றச் செய்யவும் வல்லவன். உனக்கு ஆயுள் முடிந்துவிட்டதனாலேயே அவரிடத்தில் பகையுண்டாயிற்றுனக்கு; உனது லங்காபுரி விரைவில் விதவையாகப்போகின்றபடியால்தான் இராமனைப் பலவாறு இகழ்ந்து பேசுகின்றாய்; மஹாதேஜஸ்வியும் தைவ சக்திவாய்ந்தவனுமான இராமன் கரதூஷணாதிகளான பதினாலாயிரம் ராக்ஷசர்களை அவலீலையாகப் பொடிபடுத்தினவன் காண்; அந்த ரகு குல ராமன் உன்னையும், உன்னைச் சேர்ந்தவர்களையும் ஒரு நொடிப் பொழுதில் வதைக்க வல்லவன் காண். (இது ஆரணியகாண்ட வுபதேசம்; இனி ஸுந்தரகாண்ட வுபதேசம்.) இராவணா! இவ்விலங்கா புரியில் எல்லாச் சரக்குகளையும் கொண்டு சேர்த்து வைக்கின்றனையே, உனக்கு நல்ல வுபதேசங்கள் செய்யவல்ல ஸத்புருஷர்களைக் கொண்டு சேர்த்து வைத்துக்கொள்ளவில்லையா? ஸத்துக்கள் இருந்தும் அவர்களை நீ அநுவர்த்திக்கவில்லை போலும். உனக்குள்ள விபரீதபுத்தி இதை நன்றாகக் கோட் சொல்லித் தருகின்றதே. ராவணா! நீ இவ்விலங்கையில் சுகமாக வாழ விரும்புவாயாயின், பயங்கரமான சாவை விரும்பாதிருப்பாயாயின் இராமனை நண்பனாகச் செய்துகொள்; அவர் தம்மிடம் உறவு கொண்டாடி வருபவர்களை ஒருபோதும் கெடுக்கமாட்டார். நானும் உனக்காக அவரை வேண்டி உன் பிழையைப் பொறுத்தருளும்படி செய்வேன். ராக்ஷஸாதமா! ஜனஸ்தானத்திலுள்ள அரக்கரனைவரும் இராமனால் மாண்டொழிந்ததை யறிந்து நீ அவரோடு எதிர்நின்று போர்புரிய வல்லமையற்றுப் பல வஞ்சகங்கள் செய்தனை; சார்ங்கமென்னும் வில்லாண்ட அவருடைய வில் நாணொலியை விரைவில் கேட்பாய்! இராமனாகிற கருடன் ராக்ஷஸ ஸர்ப்பங்களை அவலீலையாகக் கவர்ந்து கொல்ல வல்லவன். புலிகளினெதிரே புல்லிய நாய் நிற்க மாட்டாதவாறுபோல, அவ்விராம லக்ஷ்மணர்களின் முன்னிலையில் நீ நிற்கவும் மாட்டாதவன். இராம பாணங்களுக்கு இலக்காகித் தொலையவேண்டுவதுதான் உனது தலைவிதிபோலும் [இத்யாதிகள் ஸீதாபிராட்டியின் உபதேசமொழிகள்.]

4. பிராட்டியின் உபதேசத்திற்குப் பிறகு மாருதியின் உபதேசம் இராவணனுக்குக் கிடைத்திருக்கிறது. ராக்ஷஸேச்வரா! உனது நண்பனுன சுக்ரீவன் உனக்குச் சொல்லி யனுப்பிய இத வசனங்கள் பலவுண்டு. நானுமுரைக்கிறேன் கேளாய்! வாயுதேவனின் புதல்வனுய் அனுமனென்பவனுன நான் சீதைக்காக நூறு யோசனை விஸ்தாரமுடைய கடலைக் கடந்து இவ்விடம் வந்திருக்கிறேன். தவவொழுக்கங்களிற் சிறந்து நீதி சாஸ்திரங்களையு முணர்ந்து கீர்த்திபெற்று விளங்குகின்ற நீ நன்று செய்தாயல்லை. உன்னைப்போன்ற புத்தி சாலிகள் செய்ய முயற்சிகொள்ளமாட்டாத காரியத்தைச் செய்தாயே. ஸ்ரீ ராமலக்ஷ்மணர்கள் சீறிச் சிவந்து நிற்பர்களேல் அவர்கள் தொடுக்கும் அம்புகளின் முன்பு நிற்க வல்லவன் தேவர்களினும், அசுரர்களினும், மற்றுள்ளார்களினும் எவனுமில்லையென்று உணருவாயாக. ராவணு! இராமனுக்குக் கெடுதிசெய்து சுகம்பெற விரும்புவாருமுளரோ? இராமனிடம் நீ கொண்ட பகையை விட்டிட்டாயாகில் உனக்கு நல்லகாலமுண்டு. இல்லையேல் குலத்தோடும் விநாசமடைவாய். இராமனைச் சாமானிய மனிதனென்று நினையாதேகொள்; உன்னைப் படாத பாடும் படுத்தின வாலியை ஒரே பாணத்தினுல் முடித்திட்டவனென்று கேட்டிலையோ? நான் ராம பக்ஷபாதத்தினுல் சொல்லுபவனல்லேன்; நடுநிலைமை வாய்ந்து உனது ஹிதத்தைக் கோரிச் சொல்லுகிறேனிவ்வளவும். ராவணு! தேவேந்திரனுயினும், முப்புரங்களை யெரித்த முக்கண்ணனுயினும் அவனது தந்தையான பிரமதேவனேயாயினும், இவர்களனைவரும் ஒன்று கூடியாயினும் இராமனுக்குச் சிறிதளவும் தீங்கிழைக்க முடியாதுகாண்; இராமன் எவனை நிக்ரஹிக்கத் திருவுள்ளம் பற்றுகிருனே அவனை அநுக்ரஹிக்க ஒருவனுலுமாகாது. இத்யாதிகள் அனுமனுல் கிடைத்த உபதேச நன்மொழிகள்.

5. இதற்குப் பிறகு விபீஷணுழ்வானுல் இராவணனுக்குக் கிடைத்த வுபதேசங்கள் அளவு கடந்தவை. அவை ஒரு தடவையல்ல. பலகடவை கிடைத்திருக்கின்றன. "இராமன் மஹா பராக்ரமசாலி; தருமமூர்த்தி; அவனேடு வீண் விரோதம் நமக்குத் தகாது; அவனிடம் அபசார க்ஷாமணம் செய்துகொண்டால் நாம் நாசமடையாமல் நெடுங்காலம் வாழலாம். எவ்வளவு ஆலோசித்தாலும் நமக்குத் தோல்வியேயொழிய வெற்றியுண்டாக இடமேயில்லை. நம்முடைய ராக்ஷச வீரர்களான மந்திரிகள் உன்னுடைய முகமலர்ச்சிக்காக ஏதோ அஸம்பத் தங்களைப் பேசி உன்னை மயக்குகின்றனர். உனக்கு நேரவிருக்கும் கஷ்ட நிஷ்டூரங்களை நன்கறிந்து நான் உனக்குரைக்கும் இதமொழிகள் அந்தோ! உன் செவியிற் புகவில்லையே. இம்மூவுலகிலும் எங்குச் சென்றாலும் விடாது தொடர்ந்து கொல்லக்கூடிய ராமபாணங்கள் இலங்கையிற் புகாவண்ணம் தடை செய்யக்கூடிய நல்லுபாயத்தை எவ்வளவு உரைத்தும் கேட்கமாட்டேனென்கிருயே. ராவணு! நீண்ட உடலும் கொடிய விஷமுமுள்ள ராம த்வேஷ மென்கிற ஓர் பெரிய ஸர்ப்பம் உன்னைச் சுற்றிக்கொண்டு கிடக்கிறது. ராவணு! நான் உனது மேன்மையை விரும்பி நன்ருக ஆலோசித்து உனக்கு நன்மை பயக்கக்கூடிய இதவசனங்களைக் கூறியும் எள்ளளவும் உனக்குப் பயன்படவில்லை. ராம பாணங்களால் உனக்கு நேரப்போகிற அனர்த்தங்களை நன்கறிந்து சகிக்க முடியாமல் இவ்வளவுமுரைத்தேன். (இத்யாதிகள்)

6. பிறகு சுகஸாரணர்களின் உபதேசமும் இராவணனுக்குக் கிடைத்திருக்கின்றது. இவர்கள் ராவணனுலேயே அனுப்பப்பட்டு ராமசேனைகளை வந்து பார்த்து வியப்படைந்து அவனிடம் மீண்டு சென்று கூறுகின்றனர்; ராவணு! ராமனது உருவத்தையும் படைகளையும் பார்க்கில் அவனெருவனே இலங்கை முழுவதையும் நாசஞ்செய்ய வல்லவனென்று திண்ண மாகத் தோன்றுகின்றது. தேவர்களாலும் அசுரர்களாலும், அல்லது ஒன்றுசேர்ந்த தேவாசுரர் களாலும் ராம லக்ஷ்மணர்களை எதிர்க்க முடியாது. அவர்களை வென்றுவிடலாமென நீ நினைப்பது வீணுன நகையே. அவர்களோடு நீ விரோதம் வைத்துக்கொண்டது போதும்; வீண் கோபத்தை அடக்கிக்கொண்டு க்ஷமை வேண்டுவதொன்றே தக்கது. (இத்யாதிகள்)

7. சுகஸாரணர்களின் உபதேசத்திற்குப் பிறகு ராவணனுக்குத் தன் தாயான கைகஸியும் அவித்தனென்னும் பெருங் கிழவனுன மந்திரியும் உபதேசம் செய்ததாகத் தெரிய

வருகிறது. ஆனால் இவ்வுபதேசமானது மற்ற வுபதேசங்களைப்போலே வான்மீகி முனிவரால் நேர்கொடு நேரே வெளியிடப்படவில்லை; விபீஷணன் மனைவியான ஸரமை அவ்வுபதேசங்களைத் தான் தன் காதால் கேட்டதாக ஸீதையினிடம் வந்து கூறுவதாய் (யுத்த காண்டம், ஸர்க்கம் 34ல்) தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. தாயும் மந்திரிக் கிழவனுமான அவ்விருவரும் 'ராவணா! நீ ராமனுக்குத் தகுந்த மரியாதைகளுடன் சீதையைக் கொண்டுபோய்ச் சமர்ப்பித்துவிடு; அப்படி நீ செய்யாவிடில் உனக்கும் உன்னைச் சேர்ந்தவர்கட்கும் பெரிய அனர்த்தம் விளையும்' இத்யாதிகள் சொன்னதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

8. அதற்குப் பிறகு மால்யவானுடைய உபதேசம் வலிமிக்கது. இவன் ராவணனுக்குப் பாட்டனோடுகூடப் பிறந்தவனென்றும் மதியிற் சிறந்தவனென்றும் கூறப்பட்டுளது. இவன் உரைத்ததாவது "அரக்கர் கோமானே! ஓரரசன் தன் விரோதியின் வலிமையைக்காட்டிலும் குறைந்த வலிமையுள்ளவனாயிருந்தாலும் ஸம பலனாயிருந்தாலும் அந்த விரோதியோடு தான் நட்புக் கொள்ளவேண்டும்; எதிரியினும் விஞ்சிய வலிமையுடையவனாய் இருந்தால்தான் விரோதம் பாராட்டலாம். இவ்விஷயம் நீதி சாஸ்திர ஸித்தமாதலால் துர்ப்பலனான நீ பலவானான ராமனுடன் பகை பாராட்டுவது பொருந்தாது. தேவ ரிஷிகள் கந்தருவர் முதலான யாவரும் இராமனுக்கே வெற்றியைக் கோருகின்றனர். ராவணா! நீ தேவ தானவர்கள் யக்ஷ கந்தருவர்கள் முதலிய உயர்ந்தோரால் மரணம் நேராதிருக்கும்படி வரம் பெற்றனையே யன்றி மானிடர்களையும் வானரர்களையும் மதித்தாயல்லை. இப்போது மஹா பராக்கிரமசாலிகளான மானிடர்களும் வானரர்களும் கரடிகளும் கொண்டைமுசுக்களும் இங்குவந்து கர்ஜிக்கும் படியாய்விட்டது. இவர்களால் உனக்கு மரணம் தடுக்கமுடியாததே. இந்த ராமன் கேவலம் மானிடனல்லன். விஷ்ணுதேவனே அரக்கர்களைக் கொல்ல மானிடவுருவம் தாங்கி வந்திருக்கின்றனனென்று உணர்வாயாக. ஆகவே நீ எதிரம்பு கோப்பதைவிட்டு வணக்கங்கொண்டே வாழக்கடவை." என்று.

9. இவ்வுபதேசங்களுக்கெல்லாம் இராவணனுடைய மறுமொழி என்னவென்பதை நாம் விவரிக்கவேணுமோ? கடைசியாக மால்யவானுக்குச் சொன்ன மறுமொழியை மாத்திரம் இங்குத் தெரிவிப்போம். (யுத்தகாண்டம் முப்பத்தாறுவது ஸர்க்கங் காண்க) ராவணனுக்கு விநாசகாலம் சமீபித்துவிட்டதனால் மால்யவான் சொன்ன ஹிதமான வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாமல் மிகுந்த கோபத்துடன் மறுமொழி கூறுகிறான்' என்று வான்மீகி முனிவர் அவதாரிகையிடுகின்றார். அவன் கூறின மறு மொழியாவது—"கிழவனே! ராமன் ஓர் மானிடனாகையால் அற்ப பலமுடையவன். குரங்குகளைத் துணைகொண்டவனாதலால் நிஜ பலமில்லாதவன், தந்தையால் துரத்தப்பட்டு வந்தவனாதலால் ராஜ்யமில்லாதவன். நானோ ராக்ஷஸ ராஜன். தேவர்களையும் நடுங்கச் செய்பவன்; எல்லாவித பராக்கிரமங்களினாலும் குறையற்றிருக்கின்றேன். இப்படிப்பட்ட என்னை நீ குறைவாகப் பேசினது உனது மூர்க்கத்தனம். இராமன் ஏதோ கடலில் அணை கட்டிவிட்டானென்றால் இதில் என்ன வியப்பு? அவன் இங்கு வந்து உயிரோடு திரும்பப்போகிறதில்லை; நான் ஒருவரையும் வணங்கப் பிறந்தவனல்லேன்" என்று இந்த வார்த்தைகளையே மீண்டும் மீண்டும் மொழிந்தொழிந்தான் இராவணன்.

10. மஹாவீர மஹாசூரர்களானோர் திரள் திரளாக மாய்ந்து முடிந்துபோவதைக் கண்டுங் கூட அவன் விதியின் பயனையே பெற்றொழிந்தான். பிறருடைய உபதேசங்களும் பயன்படவில்லை; தான் கட்கூடாகக் கண்ட பெருமைகளும் பயன்படவில்லை. மதியைக்காட்டிலும் விதியே வலிதென்று தேறிற்று. ஆனால் விதியை மதியால் வெல்லலாம். ஸாவித்ரியின் உபாக்கியானம் முதலியவற்றால் அது விளங்குகின்றது. அத்தகைய விலக்ஷணமான மதி சில மஹாபாக்யசாலிகளுக்கே வாய்க்கும். ....